**இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் - 2024**

-------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுக்களின் (“சங்கம்”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தியமைக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் பிரிவு 21 அ வின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சங்கத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கத்தின்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சங்கத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சங்கத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சங்கம் செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| உருப்படி | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா | வித்தியாசம் ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| விளையாட்டுத்திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் பதிவேடுகளுக்கிடையில் நிதி மானியங்களின் வித்தியாசம். | 112,635,334 | 51,489,187 | 61,146,147 | எங்களது நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகை சரியென நாங்கள் தெரிவிக்கின்றோம். | மானியங்கள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை

### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு செலுத்த வேண்டிய மின்சாரப் பட்டியல் ரூபா 641,744 தொகையானது 5 வருடங்களிற்கு மேலாக செலுத்தப்படாமல் காணப்படுகின்றது. | சங்கத்தினது நிதி நிலைமை முன்னேற்றமடைந்தவுடன் முழுத் தொகையினையும் செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டியவைகள் தாமதமின்றி தீர்ப்பனவு செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 U-20 வயதிற்குற்பட்ட உலக சாம்பியன்சிப்பிற்காக 2024 ஆகஸ்ட் 22 இல் இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுக்களின் உப தலைவர் ரூபா 3,725,895 தொகையான முற்பணத்தினை பெற்றிருந்தார். இருப்பினும், 2024 திசெம்பர் 31 இலுள்ளவாறு அதில் ரூபா 3,054,460 மாத்திரமே தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது, நிலுவை மிகுதி ரூபா 671,434 ஆனது 09 மாதங்கள் தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. | U-20 வயதிற்கு உட்பட்ட உலக சாம்பியன்சிப்பிற்காக உப தலைவர் கவனக் குறைவாக ரூபா 671,434 இனை மேலதிகமாக செலுத்தியிருந்தார். இருப்பினும், தற்போது இம் முழுத் தொகையும் உப தலைவரினால் கொடுத்து தீர்க்கப்பட்டுள்ளது. | முற்பண கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவிற்காக முறையான பொறிமுறையொன்று நிறுவப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | 2024 மே 03 ஆம் திகதிய 2382/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விளையாட்டுகளிற்கான தேசிய சங்கங்களின் ஒழுங்குவிதி. | | | |
| (i) | பிரிவு 3 (1) (i) | இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுக்களிற்கான யாப்பானது இவ் ஒழுங்குவிதிகள் ஆரம்பிக்கப்பட திகதியிலிருந்து | அதனை தாமதமின்றி விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பேன். | சங்கமானது விளையாட்டு ஒழுங்குவிதிகளினை பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 03 மாதங்களிற்குள் பதிவிற்காக விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும், அது பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | பிரிவு 3 (1) (ii) | தற்போதய சர்வதேச தர நிலை, உரிய காலப்பகுதியின் போது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்கான தந்திரோபாயம் என்பனவற்றை உள்ளடக்கிய அடுத்த 10 ஆண்டுகளிற்கான ஓர் வணிகத் திட்டம் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அவரது அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் அதன் திகதிகளினை குறிப்பிட்டு ஓர் 10 வருட திட்டத்தினை தயாரிப்பது சாத்தியமற்றது. | சங்கமானது விளையாட்டு ஒழுங்குவிதிகளினை பின்பற்ற வேண்டும். |
| (ii) | பிரிவு 6 (xxvii) | விளையாட்டுக் கழகங்கள், நிறுவனங்கள், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள், மாகாண விளையாட்டுச் சங்கங்கள் அல்லது ஓர் மாவட்ட அல்லது மாகாண சங்கங்களுடன் இணைந்த விளையாட்டுக் கழகங்கள் போன்றனவற்றின் உத்தியோகத்தர்களின் தெரிவு உள்ளடங்களாக அனைத்து செயற்பாடுகளின் விபரங்களும் வருடாந்தம் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அது இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து தகவல்களும் கிடைக்கப்பெற்ற பின்னர் தாமதமின்றி அதனை சமர்ப்பிப்பேன். | சங்கமானது விளையாட்டு ஒழுங்குவிதிகளினை பின்பற்ற வேண்டும். |

## 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் அதன் மீதான திருத்தங்கள் என்பனவற்றின் பிரகாரம் இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கமானது அதன் ஏதாவது வரி விதிக்கத்தக்க இலாபம் மீது வருமான வரி செலுத்துவதற்கு பொறுப்பாகவிருந்த போதிலும், இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டுச் சங்கமானது இது தொடர்பில் | வரிகள் செலுத்தத் தேவையில்லையென எங்களது வரி ஆலோசகர்கள் எங்களிற்கு தெரிவித்துள்ளனர். | சங்கமானது வரிப் பிரமானங்களுடன் இணங்க வேண்டும். |

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சங்கத்தின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 5,353,125 மிகையாகவும், அதற்கு முந்தைய ஆண்டில் இதற்கு நேரோத்த பற்றாக்குறை ரூபா 13,813,078 ஆகவும் இருந்தது. இதனால், நிதி பெறுபேறுகளில் ரூபா 19,166,203 பெறுமதியான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் அமைச்சின் மானியங்கள் ரூபா 85,306,301 ஆல் அதிகரித்திருந்தமையே இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினங்களின் முக்கிய உருப்படிகளின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் பின்வருமாறுள்ளது.

| விபரம் | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி | வித்தியாசம் சாதகம் / (பாதகம்) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | % |
| **வருமானம்** | | | | |
| அமைச்சின் மானியங்கள் | 112.6 | 27.3 | 85.3 | 312.0 |
| ஏனைய வருமானம் | 22.4 | 26.0 | (3.6) | 13.8 |
| **செலவு** | | | | |
| நிர்வாகச் செலவுகள் | 5.9 | 5.9 | 0 | 0 |
| வெளிநாட்டு போட்டிச் செலவுகள் | 54.1 | 21.8 | (32.3) | 148.2 |
| உள்நாட்டு போட்டிச் செலவுகள் | 5.6 | 7.4 | 1.8 | 24.3 |
| தேசிய பூல்ச் செலவுகள் | 51.1 | 21.1 | (30) | 142.2 |
| ஏனைய செலவுகள் | 12.9 | 11.1 | (1.8) | 16.2 |

முன்னய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட அனுசரனை வருமானம் ரூபா 6,700,230 அல்லது 89 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. எனவே, முகாமைத்துவமானது சுற்றுத் தொடர்களிற்கான அனுசரனை வருமானத்தினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ரூபா 1,341,260 பெறுமதியான ஐந்து (05) உருப்படிகளின் கொள்வனவின் போது பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்படவில்லை. எனவே, அக் கொள்வனவுகளின் உண்மைத்தன்மை மற்றும் சிக்கனத்தன்மையினை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாமலிருந்தது. | கருத்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | பெறுகை வழிகாட்டிகள் சங்கத்தினால் பின்பற்றப்படல் வேண்டும். |